Puducherry

Regional Bulletin

Tamil /18.10hrs / 04.08.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 04.08.2026 – செவ்வாய்க்கிழமை          நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிறப்பு-இறப்புகளை தாமதமாகப் பதிவு செய்வதற்கான விதிமுறைகளைக் கடுமையாக்கும் மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மக்களவையில், 3ஆவது நிதி ஒதுக்கீட்டு மசோதா, இன்று நிறைவேற்றப்பட்டது.

இன்று பிறந்தநாள் காணும் புதுச்சேரி முதலமைச்சர் திரு.ரங்கசாமிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற பொருளாதார குற்றவாளிகளில் 274 பேர், கடந்த 5 ஆண்டு காலத்தில், மீண்டும் இந்தியாவிற்கு கொண்டுவரப் பட்டுள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*நாடாளுமன்றம் – 1 (17)*

பிறப்பு-இறப்புகளை தாமதமாக பதிவு செய்வதற்கான விதிமுறைகளைக் கடுமையாக்கும் வகையிலான, பிறப்பு-இறப்பு பதிவுகள் சட்டத் திருத்த மசோதா, அண்மையில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, இன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது. மக்களவையில், 3ஆவது நிதி ஒதுக்கீட்டு மசோதா, இன்று நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்ற அலுவல்கள் குறித்து, ஒரு செய்தி தொகுப்பு...

(வாய்ஸ்)

*நாடாளுமன்றம் – 2 வாய்ஸ் (17)*

(வாய்ஸ்)

இந்திய தொகுப்பு நிதியில் இருந்து, கடந்த 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட கூடுதல் செலவினங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்கான, நிதி ஒதுக்கீட்டு மசோதாவை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் கொண்டு வந்தார்.

உலக அளவிலான முதலீட்டாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களை அதிகம் ஈர்க்கும் நாடாக இந்தியாவை மேம்படுத்தும் வகையில் வருமான வரி சட்டம் உள்ளிட்ட சட்டங்களைத் திருத்துவதற்கான மசோதாவையும், அவர், அவையில் அறிமுகப்படுத்தினார். நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு, மற்றும், உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளும் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டன.

பிறப்பு-இறப்பு பதிவுகள் சட்ட திருத்த மசோதாவை, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய், மாநிலங்களவையில், கொண்டு வந்து பேசுகையில், பிறப்பு-இறப்புகள் உடனுக்குடன் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கம் என்று கூறினார்.

இரு அவைகளிலும் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, அலுவல்கள் நாளை காலை 11 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

*மங்கள் மிலன் (08)*

நாடாளுமன்றத்தின் அமர்வுக் காலத்தில், வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழுவினர் நடத்தும் மங்கள் மிலன் கூட்டம், நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்றது. திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், டாக்டர் ஜெய்சங்கர் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், மற்றும், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர். திரிணாமுல் காங்கிரசில் இருந்த பிரிந்த இந்திய தேசியவாதக் குடிமக்கள் கட்சியின் எம்.பி.க்களும், இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

*ஓம் பிர்லா சந்திப்பு (10)*

மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா, இன்று நாடாளுமன்ற வளாகத்தில் உஸ்பெகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு. பக்தியார் சைடோவை சந்தித்துப் பேசினார். இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை, நாடாளுமன்ற ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடுகள், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகள், மற்றும், மக்கள் நிலையிலான தொடர்புகள் மூலம், மேலும் வலுப்படுத்துவது குறித்து, பயனுள்ள விவாதங்கள் இந்த சந்திப்பில் இடம் பெற்றன. இந்தியாவிற்கும் உஸ்பெகிஸ்தானுக்கும் இடையே, நாடாளுமன்ற நட்புறவுக் குழு, கடந்த மார்ச் மாதம் அமைக்கப்பட்டதை, மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

*கியானேஷ் குமார் (07 )*

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார், ஜனநாயகம் மற்றும், தேர்தல் உதவிகளுக்கான சர்வதேச கழகத்தின் தலைவர் என்ற முறையில், இன்று புதுடெல்லியில், இந்தியாவிற்கான கஜகஸ்தான் தூதர் திரு. அஸ்மத் எஸ்கராயேவை சந்தித்துப் பேசினார். இருநாடுகளுக்கும் இடையே, ஜனநாயக ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ளவும், தேர்தல் நிர்வாகத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்திக்கொள்ளவும், இந்த சந்திப்பின்போது ஒப்புக்கொள்ளப்பட்டது.

*ரங்கசாமி-மோடி ( 13)*

இன்று பிறந்தநாள் காணும் புதுச்சேரி முதலமைச்சர் திரு.ரங்கசாமிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். மிகுந்த அனுபவம் மற்றும் வளர்ச்சி நோக்குடன் கூடிய திரு. ரங்கசாமியின் தலைமைத்துவத்தினால் புதுச்சேரி மக்களுக்கு பல நன்மைகள் கிடைத்திருப்பதாகவும், திரு. ரங்கசாமி நீண்ட காலம் ஆரோக்யமாக வாழ தாம் வேண்டுவதாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகப்பதிவு ஒன்றில் கூறியுள்ளார். மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி, அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா ஷர்மா, மணிப்பூர் முதலமைச்சர் திரு. யும்நாம் கேம்சந்த் சிங் உள்ளிட்ட தலைவர்களும், முதலமைச்சர் திரு ரங்கசாமிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து சமூக ஊடகத்தில் செய்திகள் வெளியிட்டுள்ளனர்.

*ரங்கசாமி வாழ்த்து (06 )*

புதுச்சேரியில் இன்று முதலமைச்சரின் பிறந்தநாளை ஒட்டி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சரின் வீட்டிற்கு நேரில் சென்று பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். தொடர்ந்து, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அரசியல்

கட்சித் தலைவர்களும் முதலமைச்சர் திரு. ரங்கசாமியை நேரில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தனர்.

*குற்றவாளிகள் - 1(04 )*

இந்தியாவில் பொருளாதாரக் குற்றம் புரிந்து விட்டு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவர்களில் 274 பேர், கடந்த 5 ஆண்டு காலத்தில், விசாரணைக்காக மீண்டும் இந்தியாவிற்கு கொண்டுவரப் பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து ஒரு செய்தி தொகுப்பு...

(வாய்ஸ்)

*குற்றவாளிகள்-2 வாய்ஸ் ( 11)*

(வாய்ஸ்)

வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற பொருளாதாரக் குற்றவாளிகளைக் கையாளுவது குறித்து, அரசு தனி சட்டம் ஒன்றை இயற்றி, தொழில்நுட்ப ஆதரவுடன் கூடிய ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஒன்றையும், உருவாக்கி இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்தகைய குற்றவாளிகளைத் தேடிப் பிடிக்க இண்டர்போல் அமைப்பினர் மூலம் பிறப்பிக்கப்படும் ரெட்-கார்னர் நோட்டீசுகளின் எண்ணிக்கையும் கடந்த 3 ஆண்டுகளில் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. இதற்கென, உலக அளவிலான தேடுதல் பணிகள், உலக நாடுகளுடன் வலுவான ஒருங்கிணைப்பு, திறன்மிகு ராஜதந்திரம் ஆகிய மும்முனை உத்திகளை அரசு பயன்படுத்தி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

*உதயநிதி (16)*

காவிரி பிரச்சனை தொடர்பாக, நேற்று திமுக சார்பில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தின் போது, சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில், தமிழக எதிர்க்கட்சித் தலைவர்

திரு.உதயநிதி ஸ்டாலினை இன்று போலீசார் கைது செய்து, விசாரணைக்காக, தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பெண்களை அவமதிக்கும் விதத்தில் திரு. உதயநிதி பேசியதாக, தஞ்சாவூரில் பெண் ஒருவர் கொடுத்த புகாரின் பேரில் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, போலீஸ் நடவடிக்கை குறித்து தகவல் கிடைத்தவுடன், உதயநிதி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முன்ஜாமீன் மனு மீது, பின்னர் நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவில், போலீசார் இன்றைய தினத்திற்குள் விசாரணைகளை முடித்து, திரு. உதயநிதியை இன்றே விடுவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. விசாரணைகளுக்கு திரு. உதயநிதி முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. காவல்நிலைய விசாரணைக்குப் பின்னர் திரு. உதயநிதி விடுவிக்கப்படுவார் என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ரயில் (09)*

இம்மாதம் 5-8, 12-19, 22-26 மற்றும் 29ஆம் தேதிகளில் புதுச்சேரி-திருப்பதி மெமு எக்ஸ்பிரஸ் ரயில், விழுப்புரம் வரை மட்டுமே இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இதே நாட்களில், புதுச்சேரி-சென்னை எழும்பூர் மெமு பாசஞ்சர் ரயிலும், புதுச்சேரிக்கு பதிலாக, விழுப்புரத்திலிருந்து இயக்கப்படவுள்ளது. தெற்கு ரயில்வேயின் திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் பல்வேறு பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் பொறியியல் பணிகள் காரணமாக, இம்மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதே பாதையில் செல்லும் வேறு பல ரயில்கள் இயக்கப்படும் நேரத்திலும், மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

*கேர□ா மை□ (08 )*

கேரளத்தில் அனைத்து 14 மாவட்டங்களுக்கும் இன்று அதி கனமழை குறித்த ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் 16 பேர் மழை காரணமான சம்பவங்களில் உயிரிழந்து இருப்பதாக கேரள அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. முதலமைச்சர் திரு. சதீஷன் இன்று பத்தனம்திட்டா மாவட்டத்தில், மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். மலைச்சரிவு ஆபத்து அதிகமுள்ள இடங்களில் இருந்து விலகி இருக்கும்படி கேரள அரசு, மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

*வானிலை (16)*

இன்று கோவை மாவட்ட மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், காஞ்சீபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தஞ்சை-நாகை-திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கும், தமிழகத்தின் இதர பகுதிகளில் லேசான மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 10ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருவாரூர் மாவட்டம் கொடவாசலில், 7 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. காரைக்காலில், 6 சென்டி மீட்டர் மற்றும் புதுச்சேரியில் 3 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

*ஸ்குவாஷ் (09)*

கனடாவில் அண்மையில் நடைபெற்ற உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் பட்டப் போட்டிகளில், தங்கம் வென்ற இந்திய வீராங்கனை அனாகத் சிங், மற்றும், வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய ஆடவர் அணியினரை, மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாராட்டி கௌரவித்தார். கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்றுப் பதக்கம் வென்ற, ஜூடோ, மல்யுத்தம் மற்றும் பாரா அத்லெட்டிக் வீரர்களையும், மத்திய அமைச்சர் பாராட்டி கௌரவித்தார்.

*தென் கொரியா பேட்மின்டன் (09 )*

தென் கொரியாவின் அஸான் நகரில் இன்று தொடங்கிய கொரியா மாஸ்டர்ஸ் பேட்மின்டன் சாம்பியன் பட்டப் போட்டிகளின், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் துஷார் சுவீர், தகுதிச் சுற்றில், ஜப்பானிய வீரரிடம் தோல்வியடைந்து வெளியேறினார். மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ப்ரியா கோன்ஜெங்பாம்-ஸ்ருதி மிஸ்ரா இணை, Round of 32 சுற்றில், ஜப்பானிய இணையிடம் தோல்வியடைந்தது. ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் கரகா-ப்ரித்வி ராய் இணை, Round of 32 சுற்றில், தாய்லாந்து அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிறப்பு-இறப்புகளை தாமதமாகப் பதிவு செய்வதற்கான விதிமுறைகளைக் கடுமையாக்கும் மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மக்களவையில், 3ஆவது நிதி ஒதுக்கீட்டு மசோதா, இன்று நிறைவேற்றப்பட்டது.

இன்று பிறந்தநாள் காணும் புதுச்சேரி முதலமைச்சர் திரு.ரங்கசாமிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற பொருளாதார குற்றவாளிகளில் 274 பேர், கடந்த 5 ஆண்டு காலத்தில், மீண்டும் இந்தியாவிற்கு கொண்டுவரப் பட்டுள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது RSS/CN/VM.

Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 04.08.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 04.08.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பது மாநிலச் செய்திகள்